


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 21.08.2023 அன்று செங்கல்பட்டு மாவட்டம் பேரூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் நிலையத்திற்கு அடிக்கல் நாட்ட உள்ளார்கள். இதனை முன்னிட்டு. பேரூரில் மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாடு பணிகளை மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களும், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திருதா.மோ.அன்பரசன் அவர்களும் இன்று (14.082023) ஆய்வு மேற்கொண்டார்கள் இவ்வாய்வின்போது, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இஆப. அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.இராகிர்லோஷ் குமார், இ.ஆ.ப அவர்கள் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஆ.ர.ராகுல் நாத், இ.ஆ.ப. அவர்கள், மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் திரு.சாய் பிரனீத் இ.கா.ப, அவர்கள் மற்றும் பல்வேறு அலுவலர்கள் உடன் இருந்தனர்,